# THE STORY OF ACEH : INSIGHTS

ஆச்சேயின் சரிதை: ஆழ்ந்த படிப்பினைகள்

# முரண்பாட்டினை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான கரிசனைகள்

"அடை மழையும் என்றேனும் ஒரு நாள் ஓயும், அதுபோல் தீராது தொடரும் யுத்தமும் ஒரு நாள் ஓயும்"

-ஆச்சே பழமொழிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சேயின் சரிதை : ஆழ்ந்த படிப்பினைகள்

## பங்கு கொண்டோர்களின் கருத்து வெளிப்பாடுகள்

" ஆச்சேயின் சரிதை : ஆழ்ந்த படிப்பினைகள்" என்ற தலைப்பில் 2007 டிசம்பர் 11ம் 12ம் திகதிகளில் நடைபெற்ற கருத்தரங்கு/செயலமர்விற்கு கூட்டு அநுசரனையாளர்களாக இருக்க முடிந்தமையையிட்டு நாங்கள் பெருமையடைகின்றோம். இந்தோனேசியாவிலுள்ள ஆச்சேயில் சமாதானம் எட்டப்பட்டது தொடர்பான தகவல்களை இந் நாட்டு மக்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும், அதற்கான கோரிக்கைகளும் பெருமளவு வெளிப்பட்டதன் விளைவுதான் இந் நிகழ்வாகும். இது புரிந்து கொள்ளக்கூடிய ஆர்வம்தான். ஏனெனில், ஆச்சேயும் கூட, நீண்டகாலக் கிளர்ச்சி, பிரதான நிலப்பரப்பில் இருந்து பிரிந்து செல்ல வேண்டும் என்ற கோரிக்கை போன்ற பிரச்சனைகளைக் கொண்டிருந்ததுடன், இலங்கையில் ஏற்பட்டதைப் போலவே, ஆச்சேயும் சுனாமி அழிவுகளுக்கும் மோசமான பாதிப்புகளுக்கும் உள்ளாகியிருந்தது.

ஹெல்சிங்கியில் கைச்சாத்திடப்பட்டு ஆச்சேயில் நடைமுறைப்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகளில் நேரடியாக சம்பந்தப்பட்டுப் பங்களிப்பு வழங்கி ஒத்துழைத்த பிரதான செயற்பாட்டாளர்களையும் இந் நிகழ்விற்கு கொண்டு வர முடிந்தமையையிட்டு நாம் மகிழ்ச்சி கொள்கின்றோம். இந்தோனேசிய அரசாங்கத்தின் பிரதிநிதிகள், ஆச்சே மாநிலப் பிரதிநிதிகள் மற்றும் இச் சமாதானச் செயற்பாட்டில் கண்காணிப்பாளர்களாகவும் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்காற்றியவர்களும், அத்துடன், இதன் வெற்றிக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுத்துறைப் பங்களிப்புகளை தொடர்ச்சியாக வழங்கி உலகின் ஒரு பாகத்தில் சமாதானத்தை எட்டுவதற்கு பங்களித்தவர்களையும் இந்த நிகழ்வில் நாம் பெற்றிருந்தமை எமது அதிஷ்டமேயாகும்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பேராளர்களுக்கு மாத்திரமே இதன் பெறுபேறுகள் பயனுடையதாக இருக்கும் எனின், எமது முயற்சிகள் பயனற்றதாகி விடும். எனவே இந்த இரண்டு நாள் நிகழ்வின் மூலம் கிடைக்கப்பெற்ற சகல விடயங்களையும் ஒரு வெளியீடாக மாற்றி பலருக்கும் கிடைக்கச் செய்வது என்ற உடன்பாட்டை நாம் எட்டியுள்ளோம். அந்தவகையில், செயலமர்வுகளின் போது குழு நிலைக் கலந்துரையாடல்களில் பங்கு கொண்டவர்களின் கருத்துக்கள் அடங்கிய ஒரு தொகுப்பு ஆவணமே இவ் வெளியீடாகும். இந் நாட்டில் எதிர்காலத்தில் வரக் கூடிய சமாதான செயற்பாடுகளின் போது பயன்மிக்கதாகக் கருதக் கூடிய அம்சங்கள் இந்த ஆவணத்தில் அடையாளங் காணப்பட்டுள்ளன. நமது நாட்டில் பயன்படுத்தப்படும் மூன்று மொழிகளிலும் இந்த ஆவணம் கிடைக்கக் கூடியதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கருத்தரங்கு/செயலமர்விற்கு அநுசரனையாளராக இருக்கக் கிடைத்ததை ஒரு வாய்ப்பாக நாம் கருதுகின்றோம். அத்துடன் இந்த ஆவணத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து ஆலோசனைகளும் அநுசரனையாளர்களின் பங்களிப்போ அல்லது அவற்றுடன் எதுவித நேரடித் தொடர்போ அற்றவை என்பதையும் நாம் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். எவ்வாறாயினும், இங்கு தரப்பட்டுள்ள ஏதேனும் ஆலோசனைகள், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமாதான செயற்பாட்டு முயற்சிகளில் பெறுமதிமிக்கதெனக் கருத்தில் கொள்ளப்படும் எனின், ஒரு சிறிய அளவிலேனும் இந் நாட்டுக்காக பங்களிப்புச் செய்யக் கிடைத்தததையிட்டு நாம் அளப்பெரிய மகிழ்ச்சியடைவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்துப் பேராளர்களுக்கும் இந் நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் எனப் பாடுபடுகின்ற அனைவருக்கும் எமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

Rev W.P. Ebenezer Joseph
Methodist Church (Sri Lanka)
அருள் திரு. எபனேசர் ஜோசப்
இலங்கை மெதடிஸ்த திருச்சபை



Amjad Mohamed-Saleem
Muslim Aid
(Sri Lanka Field Office)
அம்ஜத் மொஹமட் சலீம்-முஸ்லிம் எய்ட்

Bharat Pathak
UMCOR (Sri Lanka)
பாரத் பகத்-அம்கோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஆச்சே" யின் சரிதை: ஆழ்ந்த படிப்பினைகள்

பங்குபற்றியோர் கருத்து வெளிப்பாடுகள்:

முஸ்லிம் எய்ட் (Muslim Aid), அம்கோர் (UMCOR), இலங்கை மெதடிஸ்த திருச்சபை (Methodist Churh of Sri Lanka) ஆகிய நிறுவனங்கள் இணைந்து 2007 டிசம்பர் மாதம் 11ம் 12ம் திகதிகளில் கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நடாத்திய ஆச்சே சமாதான நடவடிக்கைகள் பற்றிய செயலமர்வு/கருத்தரங்கில் பங்கு பற்றுவதற்கு எமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை நாம் ஒரு பேறாக கருதுகின்றோம். இந்த நிகழ்வின் போது பங்கேற்ற பல குழுக்களாலும் நமது இலங்கை தேசத்தின் தற்போதைய நிலைமை ஆச்சே சமாதான முன்னெடுப்புகளின் போது அங்கிருந்த நிலைமைகளுடன் ஒப்பு நோக்கப்பட்டு, இலங்கையின் எதிர்கால சமாதான முயற்சிகளில் எந்த வகையில் இவை எடுத்துக் காட்டாக அமையும் என மிகவும் தெளிவாக ஆராயப்பட்டன. இச் செயலமர்வுகளில் பங்குபற்றிய குழுக்களினது ஆய்வு முடிவுகளின் சாராம்சமே இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் போராட்டங்களின் போக்கு வேறு விதமாக நோக்கப்பட வேண்டும் என்ற போதிலும் 'ஆச்சே' சமாதான முன்னெடுப்புகள் இலங்கை சமாதான முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் சாராருக்கு நல்லதொரு ஊக்குவிப்புச் சக்தியாகவும் சிறந்த உதாரணமாகவும் திகழும் என்பதில் சந்தேகமில்லை. இங்கு ஆராயப்படும் விடயங்கள் பொதுப்படையானதாக அமைந்திருந்த போதிலும், இலங்கையின் உண்மையான சமாதான விரும்பிகளுக்கு இவை சிறந்த அனுபவமாக, உந்து சக்தியாகவே விளங்கும். இங்கு முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் தொகுக்கப்பட்டு பதிப்பிக்கப்படல் வேண்டும் என நாம் பரிந்துரைக்கின்றோம். முடிவில்லாது நீடிக்கும் யுத்தத்திலிருந்து மீட்டெடுப்பதற்கு இப்படிப்பினைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிக்கும் எனின், எமது இம் முயற்சிகள் உண்மையில் பயன் மிக்கதாக அமையும்.

குழுநிலைக் கலந்துரையாடல்களைத் தலைமை தாங்கியோர்

Prof. Lakshman Jayatilleke
பேரா. லக்ஷ்மன் ஜயதிலக

C. Mahendren
சி. மகேந்திரன்



Brendon Sosa
பிரன்டென் சோஷா

Javid Yusuf
ஜாவிட் யூசுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தோனேசிய ஆச்சே சமாதான வேட்கை இலங்கைப் பிரச்சனைக்குப் பதிலீடாக அமையுமா?

### A. முன்னுரை

இலங்கை சுதந்திரம் பெற்று 60 வருடங்கள் கடந்து விட்டன. இருந்தும் இந்நாட்டில் சமாதானமும் ஒற்றுமையும் சுபீட்சமும் நிலவும் விதத்திலும், எமது மனித வளங்களையும் இயற்கை வளங்களையும் பயன்படுத்தி நாட்டை அபிவிருத்திப்பாதையில் இட்டுச் செல்வதற்கு ஏதுவாகவும், இங்கு வாழும் சகல இன பிரஜைகளும் திருப்தியடையும் விதத்திலும் அமைந்த அரசியல்சாசன ஏற்பாட்டிற்கான தேடல் இன்னமும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. கடந்த காலங்களில் இதற்கான எத்தனையோ வாய்ப்புக்கள் கிட்டிய போதிலும் அவை யாவு-மே தவற விடப்பட்டுள்ளன. இதன் விளைவாக, சமூகங்களுக்கு இடையில் பரஸ்பரம் சந்தேகங்களும் அவ நம்பிக்கையும் நிறைந்து காணப்படுகின்றன. இலங்கையில் சமாதானத்தை மீட்டெடுப்பதற்கான பல முயற்சிகள் தேசிய மட்டத்திலும் சர்வ-தேச மட்டத்திலும் மேற்கொள்ளப்படுகின்றன. மோதல்களில் ஈடுபட்டிருக்கும் தரப்புகளிற்கிடையில் கைச்சாத்திடப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் மூலமாக மாத்திரம் இந்த இலக்கினை நாம் அடைந்து விட முடியாது. கைச்சாத்திடப்படும் உடன்படிக்கைகளை எல்லா மக்களுக்கும் அறியச் செய்யப்பட்டு, அவர்களின் கருத்துக்களும் பிரச்சனைகளும் உள்வாங்கப்பட்டு, அவர்களின் கடந்தகால கசப்பான அனுபவங்களும் தப்பெண்ணங்களும் தவறான புரிதல்களும் களையப்பெற்று, நாட்டின் அபிவிருத்தி முயற்சிகளிலும் முன்னேற்றத்திலும் சம பங்காளர்களாக அம் மக்களும் ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாண்டு கால சிவில் யுத்தங்களுக்குப் பின்னர் பல நாடுக-ளில் இவ்வாறான சமாதான நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. இந்த முரண்பாட்டுத் தீர்வு அனுபவங்கள் இலங்கைக்கும் நல்ல படிப்பினைகளாக அமைய முடியும்.

இனத்துவ ரீதியில் பிரிவினை கோரிப் போராடிய குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களில் இந்தோனேசிய அரசாங்கம் முப்பது ஆண்டுகளாக சிக்குண்டிருந்தது – ஆச்சே சுதந்திர இயக்கம் (GAM) இந்தோனேசிய நிலப்பரப்பிலிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள விரும்பியது. இலங்கையில் தமிழ்க் கிளர்ச்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்ட ஈழக் கோரிக்கையும் மேம்போக்கில் ஆச்சே பிரிவினைக்காகப் போராடியவர்களின் கோரிக்கைக்கு மிகவும் ஒத்த தன்மை உடையது. இரு நாடுகளிலும் மத்திய அரசாங்கத்திற்கும் இனத்துவ அடிப்படையில் பிரிவினைக்காக போராடிய குழுக்களுக்கும் இடையே நீண்ட கால வன்முறை மோதல்கள் நடைபெற்றமைக்கு ஒரு பிராந்தியத்தை தளமாகக் கொண்ட இனத்துவ சிறுபான்மைக்கும் இனத்துவ பெரும்பான்மையினால் கட்டுப்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்கும் இடையில் வரலாற்று ரீதியாக நிலவிய குறைபாடுகளும் துயரங்களும் மூல வேராக இருந்துள்ளன.

இந்தோனேசியாவிலும் இலங்கையிலும் ஆயுதம் தாங்கிய போராட்டத்திற்கு சர்வதேச அளவில் ஆதரவுகளும் ஒத்துழைப்புகளும் இருந்து வந்துள்ளன. இரு நாட்டுப் போராளிகளும் அரசியல் ஆதரவுகளையும் மற்றும் நிதிப்பங்களிப்புகளையும் வெளிநாட்டிலிருந்த தமது புலம் பெயர்ந்த மக்களிடமிருந்து கணிசமான அளவிற்குப் பெற்றிருந்தனர். இந்த வலைப் பின்னல்கள் மிக அயலில் இருந்த நாடுகள் தொடக்கம் ஐரோப்பா அமெரிக்க நாடுகள் வரை பரந்து வியாபித்திருந்தது. இந் நிலைமையானது இந் நாடுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் ஸ்திரமின்மைக்கு காரணமானதுடன் குறிப்பிட்ட நாடுகளில் இருந்த மக்களுக்கு இடையிலான தொடர்புகளில் சீர் குலைவுகளையும் ஏற்படுத்தியதுடன், பொது மக்களுக்கு கடுமையான இழப்புகளையும், உள்ளக கட்டுமாணங்களில் சிதைவுகளையும் ஏற்படுத்தியிருந்தது. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான ஆற்றல்கள் மட்டுப்படுத்தப்பட்டன. இரு நாடுகளிலும் இரண்டு தரப்புகளும் ஒருவருக்கு எதிராக மற்றொருவர் மேலாதிக்கம், அடக்குமுறை, ஜனநாயக மீறல்கள், கொலைக் குற்றங்கள் எனக் குற்றம் சாட்டி வாதிட்டு வந்துள்ளன. இம் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு காலத்திற்கு காலம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்திருந்த போதிலும் உறுதியான உடன்பாட்டினை எட்டத் தவறியதன் காரணமாக, வன்முறைகள் அதிகரித்துச் சென்றதுடன், இரு தரப்பிற்கும் இடையில் நம்பிக்கையீனங்கள் அதிகரிப்பதற்கும் காரணமாகின.

இரு நாடுகளுமே சுனாமி பேரலைகளினால் 2004ம் ஆண்டு பாதிப்புக்குள்ளாகின. 2005ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்தோனேசிய அரசாங்கம் ஆச்சே போராளிகளுடனான முரண்பாட்டை ஒரு முடிவிற்குக் கொண்டு வரும் நோக்குடன் இரு தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினைக் கைச்சாத்திட்டது. இதன் மூலம் அந்நாட்டின் சமாதானம், அபிவிருத்தி என்பவற்றில் ஒரு புதிய சகாப்தம் உருவானது. ஆச்சே மக்களின் மத்தியில் நிலவிய "அடாது பெய்யும் மழையும் என்றேனும் ஒரு நாள் முடிவிற்கு வரும் , தீராது தொடரும் யுத்தமும் ஒரு நாள் முடிவிற்கு வரும்." என்ற பழமொழிக்கு இதுவொரு உதாரணமாக அமைந்தது.

இதற்கு மாறாக, இலங்கையில் சுனாமி பேரலைகளினால் ஏற்பட்ட பேரளிவுகளுக்குப் பின்னும் யுத்த நிலவரம் மேலும் முனைப்படைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. 2002ம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்ட யுத்த நிறுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்படிக்கையும் தற்போது முறிவடைந்துள்ளது. வன்முறைகளும் பரஸ்பரக் குற்றச் சாட்டுக்களும் மேலும் உக்கிரமடைந்துள்ளன. முரண்பாட்டுத் தீர்விற்கான சூழல் அண்மைக்காலத்தில் ஏற்படும் என்பதற்கான வாய்ப்பு இல்லையென்றே தோன்றுகின்றது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்ற ஆச்சே கருத்தரங்கின் போது, ஆச்சே சமாதானம் மூலம் பெறப்பட்ட வெற்றிகளில் இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளுக்கான படிப்பினைகள் உள்ளனவா என்ற விடயம் குறித்து மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் அதிக கவனத்தைக் குவித்திருந்தனர், இரு நாடுகளிலும் ஏற்பட்ட போராட்டங்களும் யுத்தமும் சில விடயங்களில் மேலோட்டமாக ஒரே விதமாக தோன்றினாலும், இலங்கை நிலைமையில் காணப்படும் மோதல்களின் மாறுபட்ட பண்புகளும் பின்புலங்களும் ஆச்சே அனுபவங்களை அப்படியே நேரடியாக இலங்கைக்குப் பிரயோகிப்பதைக் கடினமாக்குகின்றது. இருந்த போதிலும் ஆச்சே சமாதான முன்னெடுப்புகளின் வெற்றிக்கான பிரதான காரணி-களை நாம் புரிந்து கொள்வது, இலங்கை நிலைமையை ஒரு சரியான கண்ணோட்டத்தில் பரிசீலிப்பதற்கு பயனுடையதாக அமையும். அத்துடன் இது புதிய விவாதங்களைத் தொடக்கி வைக்கவும், எதிர்காலத்தில் பொருத்தமான நடவடிக்கைககளை மேற்கொள்வதற்கும் உந்து சக்தியாக அமையும்.

இலங்கைக்கான இந்தோனேசிய தூதுவரகத்தின் ஏற்பாட்டின் கீழ், 'முஸ்லிம் எய்ட்' இலங்கை அலுவலகமும், அதன் உலக-ளவிலான பங்காளி அமைப்பான 'அம்கோர்' நிறுவனமும், 'இலங்கை மெதடிஸ்த திருச்சபை' யும் இணைந்து "ஆச்சே சமாதான முன்னெடுப்புக்களின் சரிதை" என்ற கருத்தரங்கினை 2007 டிசம்பர் 11ம் 12ம் திகதிகளில் நடாத்தின. இந்தோனேசிய சமாதான முன்னெடுப்புக்களில் (சமாதான உடன்படிக்கை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுவார்த்தைகள், கண்காணிப்பு, முரண்பாட்டுத் தீர்வுகளுக்குப் பிந்திய முகாமைத்துவம் போன்ற கட்டங்களில்) பங்கேற்ற முக்கிய உறுப்பினர்களின் அறிக்கைகளும் பெறுபேறுகளும் அமர்வுகளின் போது முன்வைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் வந்து கலந்து கொண்ட சிவில் சமூகத்தின் உறுப்பினர்கள், சமய பிரதிநிதிகள் மற்றும் துறைசார் நிபுணர்கள் போன்றவர்களை அங்கமாகக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்கள் மத்தியில் ஆச்சேயின் நல்லிணக்க வரலாற்று அனுபவத்தில் இருந்து கிடைத்த படிப்பினைகளைப் பற்றி குழுநிலைக் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. ஒவ்வொரு குழுவிலும் 20-30 வரையில் பிரதிநிதிகளைக் கொண்ட நான்கு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அவை முறையே பின்வரும் தலைப்புகளில் விடயங்களை ஆராய்ந்தன. சமாதான முன்னெடுப்பு வழிமுறைகள் : கண்காணிப்பு : பிணக்குகளும் விட்டுக் கொடுப்புகளும் : பிணக்குகளுக்குப் பிந்திய புனர்நி-ர்மாணம்) ஒவ்வொரு குழுவிற்கும் சிறந்த தேர்ச்சியும் அறிவும் அனுபவமும் கொண்டவர்கள் தலைமை தாங்கி கொடுக்கப்பட்ட தலைப்புகளின் கீழ் அமைந்த விடயங்கள் யாவும் நுணுக்கமாக ஆராயப்பட்டன. இதற்கென பின்வருவோர் தலைமை தாங்க தேர்ந்தெடுக்கப்பட்டனர். திரு. சி. மகேந்திரன், (ஓய்வு பெற்ற மேனிலை இராஜ தந்திரி), திரு. பிரேன்டன் சோசா (விமானப்படை உயர் அதிகாரி), பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக (முன்னாள் உப வேந்தர்-பேராதனை பல்கலைக் கழகம்), ஜனாப் ஜாவிட் யூசுப் (முன்னைநாள் தூதுவர்) இக்குழுக்களின் ஆய்வுகளின்படி, போதிய நியாயங்களின் அடிப்படையில் ஆச்சே அனுபவங்களில் இருந்து கிடைத்த படிப்பினைகளில் இலங்கைச் சூழலுக்கும் பொருத்தமானதென குழுக்கள் அடையாளப்படுத்திய விடயங்கள் இங்கு அறிக்கையாக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## B. ஆச்சே சமாதான முன்னெடுப்பு இலங்கைக்குத் தரும் ஆழ்ந்த படிப்பினைகள்: பங்குபற்றியோர் கருத்து வெளிப்பாடுகள்

**B1.** தங்களது இலக்கினை யுத்தத்தின் மூலமாக அடைய முடியாது என்ற கருத்தை இரு தரப்பும் ஏற்றுக் கொண்டமை:

இந்தோனேசியாவில் சுஹாட்டோவின் ஆட்சிக் காலத்தின் போது, இந்தோனேசிய அரசின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமைகின்ற GAM ( ஆச்சே விடுதலைப் போராட்ட இயக்கம்) இற்கு எதிராகவும் பலமான அரசியல் எதிரிகளுக்கும் எதிராகவும் போராடுகின்ற ஒரு கருவியாக இந்தோனேசிய இராணுவம் இருந்து வந்துள்ளது. காலப் போக்கில் சுஹாட்டோவிற்குப் பின்னர், அரசியல் சூழலில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக மத்திய அரசிற்கும் போராளிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட வேண்டும் என்ற அழுத்தம் உருவானது. 1999-2003 இற்கு இடைப்பட்ட மூன்று அரசுத் தலைவர்களின் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. மேற்படி சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தமைக்கு பல்வேறு காரணங்கள் இருந்த போதிலும், சில முக்கிய விடயங்கள் அனைவரது கவனத்தையும் ஈர்த்தன. சம்பந்தப்பட்ட இரு தரப்பும் இராணுவ ரீதியில் பெற்ற அடைவுகளை தக்க வைக்கமுடியாத நிலையில் இருந்த போதிலும் கூட, எவருமே குறிப்பிடத்தக்க பரஸ்பரம் விட்டுக் கொடுப்புகளை செய்யத் தயாராக இருக்கவில்லை. ஒவ்வொரு பேச்சுவார்த்தையும் தம்மை மீள ஒழுங்கமைத்துக் கொள்வதற்கான உபாய அவகாசமாக கருதப்பட்டதே தவிர, தீர்வினைக் காண்பதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மையான முயற்சியாக அமையவில்லை என்பதுடன், பரஸ்பரம் சந்தேகங்களையும் குரோதங்களையும் வலுப்படுத்தும் நிலையையே ஏற்படுத்தியது.

இந்தோனேசிய அரசாங்கமும் ஆச்சே போராளிகளும் இராணுவ ரீதியில் தமது இலக்குகளை அடைய முடியாது என்பதை ஏற்றுக் கொண்டமையானது சமாதான சூழல் ஏற்பட்டதற்கு ஒரு மிக முக்கிய காரணியாகவும் - முழு அளவில் சமாதான முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கான தொடக்கப் புள்ளியாகவும் அமைந்தது. முன்னய கொள்கைகளையே அவர்கள் பின்பற்றுவது என்பது, நிரந்தர யுத்தத்திற்கும் அழிவுகளுக்கும் தொடர்ச்சியாக வளங்களைச் செலவிட்டுக் கொண்டிருப்பதாக மாத்திரமே அர்த்தம் கொள்ளப்பட்டது. இலங்கையிலும் தாக்குதலுக்கான பலத்தை மீளத் திரட்டுவது, விரோதப் போக்குகள் தீவிரமடைந்து செல்வது பின்னர் தேக்கநிலை ஏற்படுவது என மறுபடியும் மறுபடியும் நெருக்கடிகள் பல தடவைகள் ஏற்பட்டுள்ளன.



**B2. தெளிவான கொள்கைகளும் தலைமைத்துவமும்:**
புதிய அரசுத் தலைவர் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றதன் பின்னர், பிரிவினைவாதப் போராட்டத்தை ஆயுதப்படையின் ( இந்தோனேசிய தேசியப் படை - TNI ) பலத்தின் மூலமாக ஒடுக்க முடியாது என்பதை நன்குணர்ந்து கொண்டிருந்தார். இந்தோனேசிய படையினர் அப்போது பிரிவினைவாதிகளுக்கு எதிரான போர்களில் பல வெற்றிகளைப் பெற்றிருந்த போதிலும் ஒரு அரசியல் சக்தியென்ற வகையில் போராட்ட அமைப்பினை ஒழித்துக் கட்ட முடியாது என்பதை அரசு உணர்ந்து கொண்டது. இதனால் உடனடியாகவோ காலம் தாழ்த்தியோ GAM உடன் அமர்ந்து பேச்சுக்களை நடாத்தியாக வேண்டிய நிலை ஏற்பட்டது. புதிய அரசுத் தலைவர் சுசில் பாபங் யுடோயொனொ சில மாற்று வழிமுறைகளை முன்வைத்தார். இரு தரப்பிலும் அதி தீவிரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கினைக் கொண்டவர்கள் இருந்தனர். ஆரம்பத்தில் பரஸ்பரம் ஆழமான சந்தேகங்களைக் கொண்டிருந்த போதிலும் அரச படைகளை எதிர்த்து முற்றிலுமாக வெற்றியைப் பெற முடியாது என்று தீவிரவாதிகளின் தலைமைத்துவமும், ஆயுதமேந்திய போராட்டக்காரர்களை முற்றாக ஒழிக்க முடியாது என அரச-படையின் முக்கிய அதிகாரிகளும் புரிந்து கொண்டு ஏற்றுக் கொண்டதன் காரணமாகவும் நீடித்த யுத்தமானது இரு தரப்பின் நலன்களை மோசமாகப் பாதிக்கும் என்பதை உணர்ந்து கொண்டதாலும் புதிய அரசாங்கத்தின் முன்மொழிவினை இரு தரப்பும் ஏற்றுக் கொள்ள நேரிட்டது. இலங்கை நிலவரத்தைப் பொறுத்தவரையில் இது சரியாக புரிந்து கொள்ளப்படவில்லை. தெளிவாக விளங்கப்படுத்தப்படவுமில்லை. இதன் விளைவாக, சம்பந்தப்பட்ட இரு தரப்பினரின் கொள்கை நிலைப்பாடுகள் தொடர்பாக பரஸ்பரம் சந்தேகங்கள் நிலவுகின்றன.



B3. ஒழுங்குபடுத்தப்பட்ட அணுகுமுறையும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அர்ப்பணிப்பும்:

யுத்த முனைப்புகள் மூலம் தங்களது இலக்குகளை அடைய முடியாது என்ற நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகள் அமைப்பும் இன்னமும் வந்தடையவில்லை. தெளிவான அரசியல் தீர்வே சமாதானத்தை ஏற்படுத்தும் என்ற எதார்த்தத்தை சம்பந்தப்பட்ட இரு தலைமைப் பீடங்களும் ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றனர். இதனை நடைமுறைப்படுத்தும் விதத்தில் தமது அணிகளுக்குள் ஒழுங்கு முறையை நிலை நாட்டவும் தயங்குகின்றன. இவை சரியாகச் செய்யப்படுவதே தேக்க நிலையிலிருந்து உருப்படியான சமாதானம் நோக்கி முன்னேற வழியாகும்.

அரசு சார்பாக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் குழுவினருக்கு தெளிவான நோக்கங்களும் கொள்கைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமை பேச்சுவார்த்தையில் மேலும் சிக்கலான நிலைமை-களைத் தோற்றுவிக்கின்றன. அமைச்சரவையிலும் கட்சியிலும் உள்ளும் புறமும் நிலவும் புரிந்துணர்வு அற்ற தன்மை பேச்சுவார்த்தைக்கு பெரும் தடையாக உள்ளது. ஜனாதிபதியினால் அமைக்கப்படும் சர்வ கட்சிக்கு குழுவினுள் பொது இணக்கப்பாடு எட்டப்படாமல் உள்ளது. அத்துடன் விடுதலைப் புலிகள் அமைப்பு ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளையும் இயக்கங்களையும் தலை தூக்கா வண்ணம் தடை செய்வதன் மூலம் பேச்சு வார்த்தையின் போது தனது உள்ளார்ந்த அரசியல் பலத்தையும் இழந்து நிற்கின்றது.

**B4. நாட்டின் பெரும்பான்மையினரைப் பிரதிநிதித்துவம் செய்யும் நலன்களுடன் சிறுபான்மையினரின் அபி லாசைகளையும் மதிக்கும் அரசியல் பண்பில் அக்கறை கொள்தல்:**



குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இனப்பாகுபாடுடைய தேசியவாதப் பொறிகளைப் பரப்பும் தீவிரப் போக்குடைய சிறிய கட்சிகளின் உதவியுடன் காலத்திற்குக் காலம் ஊசல-ாடும் அரசாங்கங்களை அமைக்கும் பெரிய கட்சிகள், இனப் பிரச்சனைக்கான சரியான தீர்வினை கண்டு கொள்ள முடியாது தடுமாறுகின்றன. பொதுவான இணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் மிகவும் காத்திரமான பாத்திரம் ஆற்றிய இந்தோனேசிய ஊடகத்துறையைப் போலல்லாது, இலங்கையில் தகவல் ஊடகங்கள் அரசியல் கட்சி சார்பில் பிளவுண்டு கிடக்கின்றன. இதன் காரணமாக பேச்சுவார்த்தை மூலமாக தீர்வினைக் காண்பதற்கான பொதுக் கருத்துக்கள், பொதுநலன்களுக்கு செவிசாய்க்கும் அரசாங்கம் அல்லது சிவில் சமூகத்திற்கு ஆதரவாக தகவல் ஊடகங்கள் செயற்படுவதில்லை. மா-றாக, இந்தோனேசியாவில். சிறுபான்மை இனத்தவரையும் சம பங்காளிகளாக இணைத்துக் கொள்ளும் நல்லிணக்கம் விருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

B5. தொடர்பாடல் முறைகளும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதலும்:

ஆச்சேயைப் பொறுத்தவரையில், சம்பந்தப்பட்ட இரு தரப்பும் முறையான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு முன்னர், பல சுற்று முதற்கட்டப் பேச்சுவார்த்தைகளிலும் தேடல்களிலும் ஈடுபட்டனர். நம்பிக்கையையும் புரிந்துணர்வையும் கட்டியெழுப்புவதற்கு இந்த முதற்கட்டப் பேச்சுக்கள் உதவின. இதன் விளைவாக, முறையான உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைக்கான நேரம் பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட போது, அரசாங்கமும் போராட்ட அமைப்பும் ஏற்கனவே சீரான தொடர்பாடலை உருவாக்கிக் கொண்டதுடன், உடன்படிக்கை செய்து கொள்வதற்கு அவசியமான நம்பிக்கையும் கட்டியெழுப்பப் பட்டிருந்தது.



B6. இனங்களுக்கு மத்தியில் புரிந்துணர்வினையும் நம்பிக்கைகளையும் கட்டியெழுப்புவதில் மக்களின் பங்களிப்பு:

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகள் அமைப்பும் செய்து கொண்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து நாட்டில் விரைவில் சமாதானம் ஏற்படும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. மாறாக, கசப்புணர்வு கொண்ட சமூகங்களுக்கு இடையில் நம்பிக்கை நல்லெண்ணத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் மிகவும் மந்தமாகவே முன்னெடுக்கப்பட்டன. நீண்டகால அர்ப்பணிப்புடன் கூடிய தளமொன்றை உருவாக்குவதற்கான செயற்பாடு அடிமட்ட மக்கள் மத்தியிலிருந்து மேற்கொள்ளப்படல் வேண்டும். மக்களின் பங்குபற்றுதல் உறுதிப்படுத்தப்படுவதுடன் புதிய சமாதான முன்னெடுப்புக்கான அங்கீகாரம் மக்கள் மத்தியில் பெறப்பட வேண்டும். இது மாத்திரமே வெற்றிகரமான பேச்சுவார்த்தைக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திவாரத்தை உருவாக்கும். ஆச்சேயில் நடைபெற்றது போலன்றி இலங்கையில் இணக்கத்தை உருவாக்குவதில் சிவில் சமூகத்தின் (உள்நாட்டு, வெளிநாட்டு) முக்கியத்துவம் இலங்கையில் புறக்கணிப்பட்டது. பதிலாக இலங்கை அரசாங்கம் சமாதான செயலகம் என்ற பெயரில் அதிகாரபூர்வமான அதிகாரத்துவக் கட்டமைப்பினை உருவாக்குவதில்தான் கவனத்தைக் குவித்திருந்தது.

## B7. தேர்ச்சி கொண்டதும் நம்பிக்கைக்குப் பாத்திரமானதுமான அநுசரனையாளர்கள்:

இந்தோனேசியாவின் கடந்த கால சமாதான முன்னெடுப்புகளின் போது பல நாடுகளைச் சேர்ந்த அநுசரணையாளர்களும் மத்தியஸ்தர்களும் பஙகுபற்றியிருந்தனர். ஆயினும் கடைசியாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் வெற்றியானது பெருமளவில் பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மார்டி அத்தசாரியினதும் (Marti Ahtisaari) அவரது அரசு சார்பற்ற நிறுவனமான முரண்பாட்டு முகாமைத்துவ முன்னெடுப்பு (CMI) இன் தேர்ச்சி மிக்க அணுகுமுறையின் காரணமாகவே ஏற்பட்டது என்று கொள்ளப்படுகின்றது. சமாதான முன்னெடுப்புகளின் போது அவர் சில கடுமையான நிபந்தனைகளை உறுதிப்படுத்திக் கொண்டார். சமாதானத் தீர்வில் இரு தரப்பும் உண்மையான அக்கறையுடன் இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே ஒவ்வொரு முயற்சியிலும் அவர் ஈடுபட்டார். நேரடியாகவே பேச்சுவார்த்தைகள் கலந்துரையாடல்கள் நடாத்தப்படல் வேண்டும் என்ற அடிப்படை விதிறைகள்
தொடக்கத்திலிருந்தே நடைமுறைப்படுத்தப்பட்டன. “ஒவ்வொன்றுமே ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் எதுவு-மே ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது” என்ற அடிப்படைக் கோட்பாட்டை அவர் உறுதிப்படுத்திக் கொண்டார். இந்த விதி-முறையானது சம்பந்தப்பட்ட இரு தரப்பினைரையும் சமாதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுப்பில் உண்மையான அக்கறையுடனும் முழுமையான அர்ப்பணிப்புடனும் ஈடுபட வழிவகுத்தது. இதன் காரணமாக, இரு தரப்பையும் பிளவுபடுத்தும் பாரிய பிரச்சனைகள் ஆராய்வது தவிர்க்கப்பட்டு சிறு விடயங்களுக்குத் அவசர அவசரமாக தீர்வு காணும் போக்கு அனுமதிக்கப்படாது, பாரிய பிரச்சனைகளுக்கான மூல வேர்கள் கண்டறியப்பட்டு அவற்றிற்கான தீர்வுகளும் முன்னெடுக்கப்பட்டன. இலங்கையைப் பொறுத்தவரையில், சமாதான முன்னெடுப்பில் அநுசனையாளரான நோர்வேயின் பங்கும் நம்பகத்தன்மையும் அவர்கள் கையாண்ட வழிமுறையும் ஆரம்ப காலங்களில் வரவேற்கப்பட்ட போதிலும், காலப்போக்கில் பேச்சுவார்த்தைக்கு வழிகாட்டும் நோர்வேயின் நடுநிலைத் தன்மையில் நம்பிக்கையிழந்து அரசும் விடுதலைப் புலிகளும் அதனைக் கேள்விக்குள்ளாக்கத் தொடங்கின.



B8. உறுதியான நிலைப்பாடுகளில் இருந்து குறிப்பான நலன்களை நோக்கி இரு தரப்பினரையும் விருப்பத்துடன் நகர்ந்து வரச் செய்தல்:
இந்தோனேசிய அரசாங்கமும் விடுதலைப் போராட்ட அமைப்பும் தமது கடுங்கோட்பாட்டு நிலைப்பாடுகளில் மிகவும் உறுதியாக இருந்து வந்தனர். விடுதலைப் போராட்ட அமைப்பின் நிலைப்பாடு சட்டரீதியில் அமைந்ததல்ல, சுதந்திரமான ஆச்சே அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற கருத்தில் இந்தோனேசிய அரசாங்கம் உறுதியாக இருந்தது. போராட்ட அமைப்பின் உறுதியான நிலைப்பாடு சுதந்திரமான ஆச்சே அரசு என்பதாக இருந்தது. ஹெல்சிங்கி பேச்சுவார்த்தையின் போது வரையறுக்கப்பட்ட உறுதியான மேற்படி நிலைப்பாடுகளில் இருந்து பிரதான நலன்சார்ந்த விடயங்கள் நோக்கி கவனம் குவிக்குமாறு இரு தரப்புமே விட்டுக் கொடுக்கும் நிலைக்கு கொண்டு வரப்பட்டனர். இவ்வாறாக உறுதியான நிலைப்பாட்டிருந்து தத்தமது நலன்களை அடைந்து கொள்வதை நோக்கி இறங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர இணங்கிக் கொண்டமையானது பேச்சுவார்த்தை சுமு-கமாக தொடர்ந்து நடைபெறுவதற்கான திறவுகோலாக அமைந்தது. 'சுதந்திரமான ஆச்சே அரசு' என்ற புகழ்மிக்க உறுதியான நிலைப்பாட்டை வலியுறுத்துவதற்குப் பதிலாக அதற்கு பின்புலமாக அமைந்த உண்மையான பிரச்சனைகள் குறித்து கவனத்தைக் குவிக்குமாறு இந்தோனேசிய அரசாங்கம் போராட்ட அமைப்பினை ஊக்குவித்தது. ஆச்சே மக்கள் தமது விவகாரங்கள் தொடர்பாகவும் தமது எதிர்காலம் தொடர்பா-கவும் பயனுறுதியான கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுதான் போராட்ட அமைப்பின் உறுதியான நலன்கள் என இந்தோனேசிய அரசாங்கம் தெளிவாக கண்டு கொண்ட போது, 'பிளவுபடாத இந்தோனேசியா' மற்றும் வன்முறை மோதல்களுக்கு முடிவு கட்டுவது என்ற இரண்டு பிரதான விடயங்களுக்கு மேற்படி கோரிக்கைகள் அச்சுறுத்தல்களாக அமையாது என்பதை இந்தோனேசிய அரசாங்கம் உணாந்து கொண்டது. எனவே, சுயாட்சியுடன் கூடிய ஒரு புதிய அரச-ியல் முறைமையை ஆச்சே மக்களுக்கு வழங்குவதற்குத் தய-ாராக இருப்பதாக இந்தோனேசிய அரசாங்கம் போராட்ட அமைப்பிற்கு உறுதி வழங்கக் கூடிய நிலைக்கு இது வழிவகுத்தது. இந்த ஏற்பாடானது உள்ளூர் இயற்கை வளங்களில் இருந்து ஆச்சே மக்கள் வருமானங்களையும் வரிகளையும் அறவிடும் அளவிற்கு நெகிழ்ச்சித் தன்மையான விதிமுறைகள் கொண்ட சட்ட ரீதியான அரசியல் ஏற்பாட்டை வழங்கும் அளவிற்கு இட்டுச் சென்றது. அத்துடன் விடுதலைப் போராட்ட அமைப்பின் இராணுவ கட்டமைப்பினை கலைக்க உதவி செய்வதற்கும் போராளிகளை பிரதான சிவில் நீரோட்டத்தில் இணைந்து கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் அரசாங்கம் உடன்பட்டது. இவ்வாறான நிலைமை இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையில் ஏற்படுவதற்கு என்ன வகையான முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதற்காக இலங்கைக்குப் பொருத்தமான ஒரு மூலோபாயம் அவசியம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசகளும் இங்கு முன்வைக்கப்படுகின்றது.

B9. உடன்பாட்டின் ஏற்பாடுகளை கண்காணித்து நெறிப்படுத்த அவசியமான தெளிவான, நம்பகமான பொறி-முறைகள்:

முரண்பட்ட தரப்புகளுக்கு இடையிலான உடன்படிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சரத்துக்கள் நடைமுறைப் படுத்தப்படுவதற்கான ஒரு கண்காணிப்பு முறைமை அவசியம-ான முன்நிபந்தனையாகும். ஆச்சே சமாதான முன்னெடுப்பின் போது, சம்பந்தப்பட்ட இரு தரப்பினாலும் நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட கண்காணிப்புக் குழுவொன்று (AMM) நிறுவப்பட்டது. இது ஆசிய, ஐரோப்பிய யூனியன் நாடுக-ளின் நபர்களை கண்காணிப்பாளர்காகக் கொண்டிருந்தது. இரு தரப்பும் இதனை ஏற்றுக் கொண்டிருந்தது. ஆசிய கண்காணிப்பாளர்கள் சம்பந்தப்பட்ட பிராந்தியத்திற்கான சட்டபூர்வ விடயங்களை அடையாளங் கண்டு வழங்கியதன் மூலம் குறிப்பிட்ட விடயங்களை அப்பிராந்தியத்திற்கான கலாசார, பண்பாடுகளுக்கு அமைய அவற்றை முன்னெடுத்துச் செல்ல வழிகாட்டியதுடன் உள்ளூர் விவகாரங்கள் தொடர்பாக நெழி-வுசுழிவுகள் தெரிந்தவர்களாகவும் அவற்றிற்கு கௌரவத்தை தருபவர்களாகவும் இருந்தனர். உடன்படிக்கையிலுள்ள விடயங்கள் மீறப்படும் வரை காத்திருப்பதாக அல்லாமல் மீறல்களுக்கான சாத்தியத்தை முன் கூட்டியே உணர்ந்து அவற்றைத் தடுக்க இத் தெரிவு ஏதுவாக அமைந்தது. கண்காணிப்புக் குழு வெறு-மனே கண்காணிப்பில் மாத்திரம் ஈடுபடவில்லை. விடுதலைப் போராட்ட அமைப்பின் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களையவும் அவர்களின் படைப்பிரிவுகளைக் கலைக்கவும் உடன்படிக்கையின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. கண்காணிப்புக்குழுவின் செயற்பாடுகள் மிகவும் வெளிப்படைத் தன்மை கொண்டதாக இருந்தன. நாட்டுப் பிரஜைகள் அனை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் தமக்குத் தேவையான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமைந்தது. இதற்கென சுறு சுறுப்பாக இயங்கும் தகவல் நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையிலுள்ள உள்ளடக்கங்கள் அனைவருக்கும் கிடைக்கும்படியாகச் செய்யப்பட்டது. உடன்படிக்கையின் ஏற்பாடுகளை இக்குழு எவ்வாறு நடைமுறைப்படுத்துகின்றது என்பதை மக்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்புகள் வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறாக மக்களுக்கு உடன்படிக்கை பற்றி தெளிவேற்படுத்துவதற்கான அறிவூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இரு தரப்பு உடன்படிக்கை அச்சிடப்பட்டு பரவலாக மக்கள் மத்தியில் வினியோகிக்கப்பட்டது. இவ்வாறாக உடன்படிக்கை மக்கள் மயப்படுத்தப்பட்டு இதனூடாக புரிந்துணர்வு உடன்படிக்கை மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தது. இலங்கை அனுபவத்தைப் பொறுத்தவரையில், அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கண்காணித்த குழுவின் செயற்பாடுகள் திருப்திகரமாக அமைந்திருக்கவில்லை. அதன் நடுநிலைத் தன்மை குறித்து இரு தரப்புமே அவநம்பிக்கை கொண்டிருந்தன. இலங்கையின் கண்காணிப்புக் குழுவிற்கு முடிவுகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே அதன் கண்காணிப்பு இலக்கு கடினமானதாகவும் தாக்கமற்றதாகவும் இருந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக இலங்கை மக்கள் இருட்டில் வைக்கப்பட்டிருந்தனர். இது அதிகமான தப்பபிப்பிராயங்களுக்கும் அதிருப்திகளுக்கும் வழி வகுத்தது.

**B10. நீடித்த உறுதி மிக்க சமாதானத்தை அடையும் நோக்கில், பிணக்குக்குப் பிந்திய முகாமைத்துவத்திற்கான முன்னேற்பாட்டுத் திட்டம்:**

இந்தோனேசிய சமாதான உடன்படிக்கை செயற்படுத்தப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது புதிதாக ஏற்படும் பாதுகாப்பு நெருக்கடிகளுக்கு பரி-காரம் காண்பதற்கான ஒரு விசேட குழு அமைக்கப்பட்டது. ஹெல்சிங்கி பேச்சு வார்த்தை மாநாட்டின் போது குறித்துரைக்க முடியாது போன ஆனால் நடைமுறைப்படுத்தலின் போது ஏற்படும் பாதுகாப்பு பிரச்சனைகளை கலந்துரையாடல் மூலம் தீர்த்துக் கொள்வதற்கான ஏற்பாடாக இது அமைந்தது. சமாதான முன்னெடுப்பில் மக்களின் பங்களிப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்து. அவர்களது கேள்விகளும் அக்கறைகளும் செவிமடுக்கப்பட வேண்டியிருந்தது. பொதுமக்களுக்கு தகவல்களை வழங்கும் பிரச்சார ஏற்பாடுகளும் இருந்தன. ஆயுதங்களும் வெடிமருந்துகளும் அழிக்கப்படும் நிகழ்வுகள் பகிரங்கமாக நடைபெற்றன. இதன் காரணமாக உடன்படிக்கை மீதான மக்களின் நம்பிக்கை உறுதியாகி சமதான முன்னெடுப்பு நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்தது. சமாதானம் நீடித்த உறுதி மிக்கதாக அமைவதற்கு, போராளிகளை மீளவும் சமூக நீரோட்டத்திற்குள் கொண்டு வருவது என்பது ஒரு கடினமான பணியாகும். மனநிலைப் பாதிப்புகளில் இருந்து மீட்டெடுப்பது, பொருளாதார ஸ்திரத்தை ஏற்படுத்தல், அர
சியல் சீரமைப்பு என்பன முக்கியமான விடயங்களாகும். மறு சீரமைப்பு, புனர்நிர்மாணம் போன்றவற்றின் பலாபலன்கள் போராளிகளைச் சென்றடைவதற்கான வெளிப்படையான பொ-றிமுறைகள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இவ்வாறான விடயங்கள் முன் கூட்டியே தெளிவாக அடையாளங் காணப்பட்டு வரையறுக்கபபட்டிருக்க வேண்டும். இவை சரியாக செய்யப்படாது போனால், போராளிகள் மீண்டும் ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்படும். இலங்கையின் சமாதான பேச்சுக்களும் நடைமுறைப்படுத்தல் பொறிமுறைகளும் பரம இரகசியமான போக்குடையதாக இருந்துள்ளது. மக்கள் மத்தியில் முறையாக தகவல்கள் பரிமாறப்படாமையினால் அவர்கள் குழப்பத்தில் வைக்கப்பட்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## C. பிரதிபலிப்புக்கள்:

ஆச்சே சமாதான முன்னெடுப்புடன் இலங்கை நிலைமையை ஒப்பிட்டுப் பார்க்கையில், மேலோட்டமாக பல ஒற்றுமைகள் காணப்பட்ட போதிலும், சில முக்கிய விடயங்களைப் பொறுத்தவரையில் இலங்கை நிலைமை கணிசமான வேறுபாட்டைக் கொண்டுள்ளன. எனவே இலங்கைப் பிரச்சனையானது தனித்துவமான பரிகாரங்களை வேண்டி நிற்கின்றது. இந்தோனேசியாவில் அந்நாட்டு அரசாங்கமும் ஆச்சே போராட்டக் குழுவும் மாத்திரமே மோதலில் ஈடுபட்டிருந்தன. இலங்கையில் பல குழுக்கள், தமிழர்கள் மாத்திரமல்ல முஸ்லிம்களும் மோதல்களில் சிக்குண்டிருந்தனர். எனவே, எதிர்காலத்தில் வரக் கூடிய சமாதான முனனெடுப்புகளில் இவர்களும் உள்வாங்கப்படல் வேண்டும். கடந்த கால சமாதானப் பேச்சுவார்த்தை விடுதலைப்புலிகளின் இராணுவ நிலைப்பாட்டிருந்து அதனுடன் மாத்திரமே நடாத்தப்பட்டது.

ஆச்சே விடுதலை இயக்கத்தின் அரசியல், இராணுவ போராட்டம் ஆச்சே மாநிலத்தில் மாத்திரம் மையப்பட்டிருந்தது. சகல ஆச்சே மக்களும் இந்த மானிலத்தில் வாழ்ந்தனர். அதனையே தமது வரலாற்று பூர்வ தாயகமாக கருதியிருந்தனர். ஆனால், இலங்கை நிலைமை வேறுபட்டது. தமிழரின் தாயகமென வகைப்படுத்தப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு (இவை மோதல்கள் நடைபெறும் பிரதேசங்கள்) வெளியே பெரும்பான்மையான தமிழ் மக்கள் வாழ்கின்றனர்.

இலங்கையைப் போலன்றி, ஆச்சே போராட்ட அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் மட்டுப்பட்டதாக இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சே போராட்ட அமைப்பு சிவிலிய இலக்குகள் நோக்கி ஒருபோதும் தற்கொலைத் தாக்குதல் நடாத்தியதில்லை. அத்துடன் இராணுவத் தாக்குதல்களை ஜகார்த்தாவிலோ அல்லது இந்தோனேசியாவின் இதர நகரங்களிலோ மேற்கொள்ளவில்லை. ஆச்சே போராட்ட அமைப்பு தனக்கென கடற்படையோ அல்லது விமானப் படையையோ கொண்டிருக்கவில்லை. அதன் தாக்குதல்கள் அனைத்தும் ஆச்சே பிராந்தியத்திற்குள் மாத்திரம் மட்டுப்பட்டிருந்தது. மாறாக, விடுதலைப் புலிகள் அமைப்போ தனது தாக்குதல்களை தலை நகரிலும் மேலும் பல நகரங்களிலும் மேற்கொள்ளும் விருப்பினையும் ஆற்றலையும் நிரூபித்துக் காட்டியது. இதன் மூலமாக மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியதுடன் மக்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டனர். விட்டுக் கொடுப்பு மற்றும் அரசியல் இணக்கத்தை காண்பதில் இவை பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. சுஹார்ட்டோவின் ஆட்சி வீழ்ச்சி கண்டதிலிருந்து இந்தோனேசியாவின் அரசியல் கட்சிகளின் மத்தியில் பிளவுகளும் நெருக்கடிகளும் நிலவின. சமாதான உடன்பாட்டினை எதிர்க்கும் தரப்பிற்கு உறுதியான, நீடித்த அரசியல் கட்டமைப்புகள் ஒப்பீட்டளவில் இருக்கவில்லை. எனவே பேச்சு வார்த்தைகள் மிகவும் சுமுகமான நிலையில் நடைபெற்றதுடன் ஜன நாயக ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு சாதகமான நிலைமையும் தோற்றுவித்திருந்தது. ஆனால் இலங்கையில், விடுதலைப் புலிகள் அமைப்புடன் ஏதாவது ஒரு கட்சி செய்து கொள்ளும் உடன்படிக்கை நாட்டைக் காட்டிக் கொடுப்பதாகவும், நாட்டுக்குச் செய்யும் துரோகமாகவும் மற்றய கட்சிகளால் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. இதன் காரணமாக நடுநிலையான பக்குவமான சமாதான ஏற்பாடுகள் தவிர்க்கப்பட்டு ஏதோ வகையில் தீவிரத்தன்மை கொண்ட முடிவுகளை எடுக்கும் நிலை ஏற்படுகின்றது.



இலங்கையின் இன்றைய அரசியல் கலாசார சூழலில் என்னதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து கொண்டிருக்கின்ற போதிலும், ஆச்சேயின் முன்னுதாரணம் விவேகம் நிறைந்ததாகவும் நமக்கு ஒரு விடிவெள்ளியாகவும் தோன்றுகின்றது. – அடாது பெய்யும் மழை ஒரு நாள் முடிவிற்கு வரும், தீராது தொடரும் யுத்தமும் ஒருநாள் முடிவிற்கு வந்தே தீரும் - அவ்வாறான எதிர்பார்ப்புடனே ஆச்சேயின் சமாதானப் பயணம் பற்றிய இந்த சரிதை இந்த அனுபவம் இந் நாட்டின் எல்லா மக்கள் மத்தியிலும் கொண்டு செல்லப்படல் வேண்டும் என்று இந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்களாகிய நாம் விரும்புகின்றோம். இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட நாம் அனைவரும் ஆச்சே சமாதான முன்னெடுப்பின் வெற்றியையிட்டு பெருமிதமடைவதுடன் அதன் சரிதையை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் ஆசைப் படுகின்றோம். இந்த சரிதை இலங்கையின் சமாதனத்திற்கு முன்னுதாரணமாகவும் உந்து சக்தியாகவும் அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

சமத்துவம், நீதி என்பவற்றை உறுதி செய்யக் கூடியதும், சிந்தனை மற்றும் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரத்திற்கு வழி வகுக்கக் கூடியதும், தனிமனித மற்றும் சமூக உரிமைகளையும் கௌரவத்தையும் பாதுகாத்து மேம்படுத்தக் கூடியதும், அச்சமும் சந்தேகமும் இன்றி வாழ்வின் இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடியதும், தேசிய அபிவிருத்தி முயற்சிகளுக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஒரு புதிய சூழல் இந்நாட்டில் விரைவில் ஏற்பட வேண்டும் என இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட அனைவரும் பிராத்திக்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Presenters

## கருத்துரைகள் சமர்ப்பித்தோர்

பதுலுல்லா வில்மொட் (Fadlullah Wilmot) : ஆச்சே நிறுவனத்திற்கான ஆலோசகர்

ஹமிட் அவாலுதீன் (Hamid Awaluddin): நீதி மற்றும் மனிதவுரிமைகள் தொடர்பில் இந்தோனேசிய முன்னாள் அமைச்சர். ஹேல்சிங்கி சமாதானப் பேச்சுவார்த்தையில் இந்தோனேசிய அரசாங்கத்தின் சார்பில் கலந்து கொண்டவர்.

நெவில் லதுவஹெட்டி (Neville Ladduwahetty): இலங்கையின் அரசியல் ஆய்வாளர், எழுத்தாளர்.

டொக்டர் மைக்கல் மோர்பிட் (Dr. Michael Morfit): ஹெல்சிங்கி பேச்சுவார்த்தையின் பெறுபேறுகளை ஆய்வு செய்து முழுமைப்படுத்துவதற்காக ஜகார்த்தா ஜனாதிபதி செயலகத்தினால் ஆணைக்குழு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டவர்.

அன்டனி ரெய்ட் (Anthony Reid): சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் ஆசிய ஆய்வு நிறுவனத்தில் தென்கிழக்காசிய வரலாற்று ஆசிரியராக கடமையாற்றுபவர். இவர் இந்தோனேசிய அரசியல் விவகாரங்கள் பற்றி பல நூல்களை எழுதியுள்ளார்.

வில்லியம் ஒஷ்கப்டான் (William Ozkaptan): ஆச்சேயில் அமைந்துள்ள "பிணக்குக்குப் பிந்திய சமாதான முன்னெடுப்புக் கருத்திட்டத்தின்" உயர்நிலை ஆலோசகர். ஆச்சே சமாதான ஆய்வு நிலையத்தின் இணைப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரோலின் சில்வஸ்டொப்பே (Caroline Silfverstolpe): ஆச்சே கண்காணிப்புக் குழுவில் பொதுசன தகவல் தொடர்பு அலுவலராக கடமையாற்றியவர். பின்னர், தலைமைத் தூதுவரின் பிரத்தியேக செயலாளராக செயற்பட்டவர்.

லூசி வைட் (Lucie White): பொருளாதாரம், சமூக உரிமைகள் தொடர்பில் தேர்ச்சி பெற்ற ஒரு கல்விமான்

ஒட்டு சம்சுதீன் (Otto Samsudin): ஜகார்த்தாவிலுள்ள மனிதவுரிமை கண்காணிப்பு அரசார்பற்றி நிறுவனத்தில் உயர் நிலை ஆய்வாளராக கடமைமையாற்றுபவர். ஆச்சே மோதலுக்கு 2000ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு தற்காலிக முற்றுப் புள்ளியைக் கொண்டு வந்த சமாதான ஒப்பந்த நகல் ஆவணத்தை தயாரிக்க உதவியவர்.

அட்லி அப்துல்லாஹ் (Adli Abdullah): பண்டாவிலுள்ள ஆச்சே ஷியா கவ்லா பல்கலைக் கழக சட்டத்துறை விரிவுரையாளர்,

ஷைனல் ஆரிபின் (Zainal Arifin): ஆச்சே சமாதான ஒன்றியத்தின் தொடர்பாடல் மற்றும் இணைப்புக் குழுவின் உறுப்பினர். ஆச்சே கண்காணிப்புக்குழுவின் இந்தோனேசிய அரசாங்கத்தின் பிரதிநிதியாக செயலாற்றியவர்.

அன்வர் நூர் (Anwar Noer): ஆச்சே சமாதான ஒன்றியத்தின் தொடர்பாடல் மற்றும் இணைப்புக் குழுவின் உறுப்பினர். ஆச்சே கண்காணிப்புக் குழுவில் இந்தோனேசிய அரசாங்கத்தின் பிரதிநிதியாக செயலாற்றியவர்.

அகுஸ்வான்டி(Aguswandi): "பிணக்குக்கு பிந்திய முன்னெடுப்பு" தொடர்பில் ஆலோசகராக சமாதான வளங்கள் நிலையத்தில் கடமையாற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்வர் அபூபக்கர்(Azwar Abubakar): 2004-2005 வரை ஆச்சேயின் பதில் ஆளுனராகவும் 2000-2005 வரை துணை ஆளுனராகவும் கடமையாற்றியவர்.

நூர்டின் அப்துல் ரஹ்மான் (Nurdin Abdul Rahman): ஹெல்சிங்கி சமாதான பேச்சுவார்த்தையில் ஆச்சே விடுதலை அமைப்பின் பேச்சுவார்த்தைக் குழுவில் ஒருவராக கலந்து கொண்டவர்.

## குழுநிலை அமர்வுகளுக்கு அநுசரனையாளர்களாக செயற்பட்டவர்கள்



லக்ஷ்மன் ஜயதிலக (Lakshman Jayatilleke): பேராதனை பல்கலைக் கழக பேராசியர். வர்த்தக முகாமைத்துவ தேசிய நிறுவனத்தின் தலைவர். தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் இளைஞர்களுக்கான ஜனாதிபதி ஆணைக்குழு என்பவற்றின முன்னாள் தலைவர்.

சி. மகேந்திரன் (C. Mahendran): இலங்கை வெளிவிவ-கார சேவைத்துறையில் 1957ம் ஆண்டிலிருந்து 1992 வரையிலும் பின்னர் 2002-2004 காலப்பகுதியிலும் செயலாற்றியவர். வாசிங்டன், ஐநா, கானா, சீனா ஆகிய நாடுகளுக்கான தூதுக்குழுவில் கடமையாற்றியவர். சீனாவிலும், கொரியாவிலும் ஜப்பானிலும் ஐநா விலும் இலங்கைக்கான தூதுவராகக் கடமையாற்றிவர். வெளிவிவ-கார அமைச்சின் அரசியல் விவகாரப் பிரிவிற்கு செயலாளர் நாயகமாக இருந்தவர். இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் அமெரிக்காவிலுள்ள ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானப்படைத் தளபதி பிரேண்டன் சோசா (Air Vice Marshal Brendan Sosa): ஓய்வுபெற்ற விமானப்படைத் தளபதி, இலங்கை விமானப்படை ஆணைக்குழுவின் உறுப்பினர். ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இவர் வெளிநாட்டு ஏற்றுமதி கொம்பனியொன்றில் நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். இவர் ஏற்றுமதி/முகாமைத்துவக் கொம்பனியொன்றின் தலைவர். சமகால பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக மாதாந்த சஞ்சிகையொன்றில் கட்டுரைகள் எழுதுகின்றார். இலங்கை ஜனாதிபதியினால் இவருக்கு தேசிய விருதொன்று வழங்கப்பட்டுள்ளது. சுனாமிக்குப் பின்னர், "வேல்ட் விசன்" நிறுவனத்தில் தொண்டராகப் பணியாற்றினார்.

ஜாவிட் யூசுப் (Javid Yusuf): இவர் ஒரு சட்டத்தரணி, சமாதானம் மற்றும் மனிதவுரிமைகள் தொடர்பில் தீவிர செயற்பாட்டாளர். இவர் கொழும்பு ஷாஹிரா கல்லூரியின் முன்னாள் அதிபர், சவுதியில் இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றியர். இலங்கை மனிதவுரிமை ஆணையத்தின் உறுப்பினர். வெளி விவகார அமைச்சில் உயர்நிலை ஆலோசகராகக் கடமையாற்றியவர். முஸ்லிம் சமாதான செயலகத்தின் முன்னாள் செயலாளர் நாயகம். பாரதூரமான மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக தற்போது ஆராய்ந்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஒரு உறுப்பினராகக் கடமையாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRESENTED BY

. PATHS

FACILITATED BY

Muslim Aid

Serving Humanity

UMCOR

The Methodist Church Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org